## கேரளா உள்ளாட்சித் தேர்தல்:

# காங்கிரஸ், இடதுசாரி முன்னிலை!

## பா.ஜ.க.வுக்கு கடும் பின்னடைவு!

திருவனந்தபுரம், டிச.14-

கேரளா உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நடைபெற்று வரும் நிலையில், காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகள் முன்னணிலையில் உள்ளன. அதேநேரம் பா.ஜ.க.வுக்கு கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

கேரளாவில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற உள்ளாட்சித்தேர்தலில் பதிவான வாக்குகள் காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு வருகின்றன. உள்ளாட்சித் தேர்தலில் அதிக இடங்களில் காங்கிரஸ் கூட்டணி முன்னிலையில் உள்ளது.

கேரளாவில் உள்ள கொல்லம், திருச்சூர், கோழிக்கோடு, கண்ணூர் உள்ளிட்ட 6 மாநகராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 4 மாநகராட்சிகளை கைப்பற்றியது. மொத்தமுள்ள 86 நகராட்சிகளில் 48 இடங்களில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக கூட்டணி முன்னிலையில் உள்ளது. ஆளும் இடதுசாரி கூட்டணி 30 நகராட்சிகளில் முன்னிலை பெற்றுள்ளது. 14 மாவட்ட பஞ்சாயத்துகளில் காங்கிரஸ் ஏழு இடங்களிலும், இடதுசாரி கூட்டணி ஐந்து இடங்களிலும் முன்னிலையில் உள்ளது. 6 மாநகராட்சிகளில் காங்கிரஸ் 3, இடதுசாரிகள் 2 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன. 152 ஊராட்சி ஒன்றியங்களில் காங்கிரஸ் கூட்டணி 69 இடங்களிலும், இடதுசாரி கூட்டணி 64 இடங்களிலும் முன்னிலையில் உள்ளது.

கேரள உள்ளாட்சித் தேர்தலில் பாஜக கூட்டணி 2 நகராட்சி, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் மட்டுமே முன்னிலையில் உள்ளது. கேரள உள்ளாட்சித் தேர்தலில் பாஜக கூட்டணி மாநகராட்சி, மாவட்ட பஞ்சாயத்துகளில் கடும் பின்னடைவை சந்தித்துள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 297 வது நாள்!

## கொளத்தூர் கிழக்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!





சென்னை,டிச.14-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 297 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (13.12.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 66அ, காமராஜர் நகர், காந்தி நகர் சந்திப்பு, திரு. வி.க நகர் பஸ் நிலையம் எதிரில், 2) வட்டம் 67, சுப்ரமணிய தோட்டம், பெரம்பூர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.


இந்நிகழ்ச்சியில் ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ். பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ் குமார்,

பி.டி.சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக

# மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் நாளை (15.12.2025 – திங்கட்கிழமை) பகல் 11 மணி அளவில், ஆலந்தூர் கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் என்னுடைய (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, து.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று அவசியம். இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: டிசம்பர் 16 அன்று ஆலந்தூர் ஹஜ் அவுஸ் அடிக்கல் நாட்டிட முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் வருகை மற்றும் கழக ஆக்க பணிகள்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.




முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால், வரும் டிசம்பர் 27ம் தேதி, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் தமிழினத் தலைவர், கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலை திறக்கும் இடத்தினை, 11/12/2025 வியாழக்கிழமை அன்று பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டு, கட்டுமானப் பணிகளை பார்வையிட்டனர்.

## தி.மு.க. இளைஞர் அணி – வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

# திராவிட வழித்தோன்றல்களே! திருவண்ணாமலைக்குத் திரண்டு வருக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்பழைப்பு!



**சென்னை, டிச. 14 -**

**திருவண்ணாமலையில் இன்று, வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறுவதையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், "கழக இளைஞர் அணியின் வடக்கு மண்டல இளைஞர் அணிச் சந்திப்பு நிகழ்வுக்கு, திராவிட வழித்தோன்றல்களே! திருவண்ணாமலை நோக்கித் திரண்டு வாரீர்!" என, அன்பழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

தமிழ்நாட்டின் தலைமகன், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசும்போது, "I belong to the Dravidian Stock" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்.

திருவண்ணாமலைக்கு வரும் தி.மு.க. இளைஞர் அணியின் வடக்கு மண்டலத்தின் New Dravidian Stock, you are welcome!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தவறான தகவலைக் கூறிய பா.ஜ.க. எம்.பி.!

## தமிழ்ப் பேராசிரியர்கள் கண்டனம்!

சென்னை, டிச. 14 -

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தவறான தகவலை கூறிய பா.ஜ.க. எம்.பி.யின் அனுராக் தாக்கூரின் பேச்சுக்கு பக்தர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

திருப்பரங்குன்றம் வழக்கில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பு சமூக பாதுகாப்பை சீர்குலைப்பதாக உள்ளதாக கடும் விமர்சனம் எழுந்தது. இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் நீதிபதிக்கு எதிராகவும், அவரை பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தியும் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், தொடர்ந்து சர்ச்சைக்குரிய தீர்ப்புகளை வெளியிட்டு வரும் உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பணிநீக்கம் செய்ய வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் இம்பீச்மெண்ட் நோட்டீஸ் வழங்கியுள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் பேசிய பா.ஜ.க. எம்.பி. அனுராக் தாகூர், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் இந்துக்கள் மீது தடியடி நடத்தப்பட்டதாக தவறான தகவலை கூறினார். இந்நிலையில், பா.ஜ.க. எம்.பி.யின் தவறான கருத்துக்கு தமிழ்ப் பேராசிரியர்கள், பக்தர்கள் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சியில் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில்

# சாலை மேம்பாலம், பேருந்து நிறுத்தம், கால்வாய் அமைக்கும் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார் !

திருவள்ளூர் டிச 14;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டில் தொடங்கி வைத்தார்.

ஆவடி மாநகராட்சி 46 வது வார்டு ஜாகிர் உசேன் தெருவில் 9.00 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி 44 வது வார்டு. குடியிருப்பு பகுதி இரண்டாவது தெருவில் 11.00 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி , 40 வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 91 வது தெருவில் 21.40 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி. 41 வது வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 17 வது தெருவில் 10.30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, 35 வது வார்டு திருமலைராஜபுரம் பகுதியில் 23.50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலை சீரமைக்கும் பணிகள் 48 வது வார்டு. அன்பு நகர் பிரதான சாலையில் 18.30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி , 33 வது வார்டு அயப்பாக்கம் சந்திப்பில் 40 40 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிறு பாலம் அமைக்கும் பணி 31 வது வார்டு புதிய அண்ணாநகர் என் எஸ் கே தெருவில் 12 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி 32 வது வார்டு திருமுல்லைவாயில் அண்ணா நகர் ரயில் நிலைய அருகில் 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணி 32 வது வார்டு திருமுல்லைவாயில் சிவசக்தி நகரில் 15.70 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை சீரமைத்தல் பணி 30 வார்டு தனபால் தெருவில் 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகள் 28 வது வார்டு திருமுல்லைவாயில் மணிகண்டபுரம் ஏழாவது தெருவில் 9. 60 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அதே போல் 25வது வார்டு ஸ்ரீதேவி வைஷ்ணவி நகரில் 9.90 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணிகள் 6 வது வார்டு திருமுல்லைவாயில் 21.00 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணி , மற்றும் 39, 38, 23, 22,14, 18, 15, 3, 5, 12 ஆகிய வார்டுகளின் 2. கோடியே 88 லட்சம் 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் கால்வாய், 9 புதிய சாலை அமைக்க பணிகளை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் அப்போது பல்வேறு திட்டப் பணிகளை உடனடியாக நிறைவேற்று வதற்காக பொதுமக்கள் பல்வேறு ஓட்டுனர்கள் தமிழ்நாடு அரசுக்கும் தமிழ்நாடு முதல்வருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்

இந்நிகழ்ச்சியில் அருகில் ஆவடி மேயர் உதயகுமார் ஆவடி ஆணையர் சரண்யா, மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், ஜோதிலட்சுமி, அமுதா பேபிசேகர், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர்கள் பேபி சேகர், பொன். விஜயன், ஜி.நாராயண பிரசாத், கவுன்சிலர்கள் வட்ட செயலாளர்கள் சத்திய கோ.ரவி, சுகன்யா சதீஷ் குமார், எம்.குமார், மீனாட்சி, சோழகண்ணன், சுமதி, சண்முகசுந்தரம், வி.மனோகரன், சாந்தி பாண்டியன், பா.யுவராஜ், கீதா, ராஜசுந்தரம், கார்த்திக் காமேஷ், விஜயகுமார், ஹரி, சக்தி வேல், வெங்கடேசன், ஆர். சுதாகர், எஸ்.செல்வம், வி. எம்.நாகராஜ், என்.கிருஷ்ணகுமார், பி.டிசோசா, பை ரவி ஜான், சரளா செந்தில், மேகலா, பழனி, ஜெயந்தன், க.ரமேஷ், பன்னீர் செல்வம், ராஜேஷ், கு.சேகர், ராஜலிங்கம், இளங்கோவம், ஆறுமுகம், கிருஷ்ணமூர்த்தி, செண்பகவல்லி, ரவிச்சந்திரன், சுந்தரி சிங்காரம், மற்றும் அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.




நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நெல்லியானம் நகரக் கழகத்தின் சார்பாக என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற திட்டத்தின் கீழ் நடைபெற்ற வாக்காளர் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் அடங்கிய கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ் குமார் கலந்து கொண்டு அரசின் நலத்திட்டங்களையும் தேர்தல் பணிகள் குறித்தும் விளக்கிப் பேசினார். உடன் நகர கழக செயலாளர் சேகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் காசிலிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.